அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 04/2000

எனது இல: E/VIII/04 S.L.T.S.V /II
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07.
2000. ஜனவரி. 26.

எல்லா அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள் அனைவருக்கும்.

1094/9 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட கசெற்றில் வெளியிடப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியற் சேவைப் பிரமாணக்குறிப்பிற்கான திருத்தங்கள்.

1999.08.23 ஆம் திகதிய 1094/2 ஆம் இலக்க, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட கசெற்றில் வெளியிடப்பட்ட இலங்கைத் தொழில்நுட்பவியற் சேவையின் பிரமாணக்குறிப்பின் 4.0, 6.0, 8.0, 9.0, 10.0 ஆம் பந்திகளை பின்வருமாறு திருத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

02. சம்பள அளவுத்திட்டங்களினதும் ஊழியர்கோப்பினதும் கட்டமைப்பு

" பயிற்சி வகுப்பு தொடக்கம் வகுப்பு 1 வரை ஊழியர்கோப்பு விகிதாசாரம் இருத்தலாகாது என்பதுடன் பதவிகளின் மொத்த எண்ணிக்கையானது ஒவ்வொரு திணைக்களத்தினதும் தேவைப்பாடுகளைக்கொண்டே தீர்மானிக்கப்படுதல் வேண்டும் " என வாசிக்கப்படும் பந்தியை அடுத்து பின்வரும் வசனம், அதாவது " கீழே குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத் திட்டங்கள் 1997.01.01 முதல் அமுலுக்கு வருதல் வேண்டும் " என்பது புதிதாகச் சேர்க்கப்படல் வேண்டும்.

03. 6.0 ஆட்சேர்ப்பு

6.1 ஆம் 6.2 ஆம் பந்திகள் மாற்றமெதுவுமின்றியிருக்கும். 6.3 ஆம் பந்தி முற்றிலும் நீக்கப்பட்டு அதனிடத்தில் பின்வரும் பந்தி பதிலீடு செய்யப்பட்டிருக்கிறது.
" பயிற்சித் தரத்திற்கான அனுமதிக்கு தோற்றுநர்கள் கீழே (1) இல் தரப்பட்டுள்ள அடிப்படைக் கல்வித் தகைமைகளை அல்லது கீழே (11) இல் தரப்பட்டுள்ள அடிப்படைத் தொழில்நுட்பவியற் தகைமைகளையும் கல்வித் தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(1) "ஒரே தடவையில் மூன்று விஞ்ஞானப் பாடங்களிற் சித்திகளுடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டுமென்பதுடன், அவற்றுள் 2 இற் பெற்ற சித்திகள் அவர்கள் ஆற்றவிருக்கும் சேவைக்குப் பொருத்தமானவைகளாகவிருத்தல் வேண்டுமென்பதோடு க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் இருதடவைகளுக்கு மேற்படாது, மொழி விஞ்ஞானம் அத்துடன் வேறு ஒரு பாடத்தில் பெற்ற திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(11) தொழில்நுட்பவியலில் தேசிய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் ஓராண்டு கால முழுநேர வரைஞர் பாடநெறியை நிறைவுசெய்திருத்தல் வேண்டும் அல்லது இலங்கைத் தொழில்நுட்பவியற் சேவைச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது வேறு தொழில்நுட்பவியல் தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

க.பொ.த. (சா.த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது, மொழி அல்லது இலக்கியம், எண்கணிதம்/கணிதம், விஞ்ஞானம் அத்துடன் வேறு ஒரு பாடத்திற் பெற்ற திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

6.3.1, 6.3.2, 6.3.3 ஆம் பந்திகள் மாற்றமெய்தியிருக்கும்.

04. 6.4 நியமனத்திற்கான தகைமை

6.4.1 ஆம் உப-பந்தியின் (VII) ஆக உடனடுத்து பின்வரும் குறிப்பு சேர்க்கப்பட்டுள்ளது.
" மேற்போந்த (V) இல் குறிப்பிடப்பட்டுள்ள திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட தொழில்நுட்பவியலில் தேசிய தகுதித்தேர்வுப்பத்திரப் பரீட்சையிற் சித்தியடைந்த தேர்வுநாடிகளைப் பொறுத்தவரை, தகுதித் தேர்வுப் பத்திரநெறிக்கு நுழைவுத் தேவைப்பாடான "அத்திவார நெறி"யை வெற்றிகரமாகப் பின்பற்றியவர்களாகவிருக்குமிடத்து; அவர்கள் க.பொ.த.(சா.த) சித்திபெற்றிருக்கவேண்டிய தேவைப்பாட்டிலிருந்தும் விலக்களிக்கப்படுவர்".

எவ்வாறாயினும், அவர்கள் அரசகரும மொழித் தேர்ச்சி தொடர்பான தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்தவர்களாகவிருத்தல் வேண்டும். மேலும், தொழில்நுட்பவியற் சேவைப் பிரமாணக் குறிப்பின் 6.3(11), 6.4.1 ஆம் பந்திகளிற் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பவியற் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பகாரர் குறிப்பிட்ட அத்திவார நெறிகளைப் பின்பற்றுவதற்கு நுழைவுக்கான தேவைப்பாடுகளை நிறைவேற்றியிருக்குமாறு தெரிவுசெய்யப்படுகையில் அவர்கள் கேட்கப்பட்டால், அவர்கள் அவ்வாறு செய்தல் வேண்டும்.

05. 9.0 திணைக்களப் பரீட்சைகளும், வினைத்திறமை காண் தடைப்பரீட்சையும்

உள்ளதாகவிருக்கும் உப-பந்தி (IV) நீக்கப்பட்டு, அதனிடத்தில் பின்வரும் புதிய பந்தி பதிலீடு செய்யப்பட்டுள்ளது.

" IV. வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையிற் சித்தியடையவேண்டிய தேவைப்பாட்டிலிருந்து 1999.08.23 ஆம் திகதிக்கு முன் விலக்களிக்கப் பட்டவர்களும், விலக்களிக்கப்படவுள்ளவர்களும், புதிய பிரமாணக் குறிப்பில் கூறப்பட்டுள்ள பதவியுயர்வுகளுக்கு தகைமைபெறுவதற்காக வினைத்திறமை காண் தடைப் பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்படுவர்".

உள்ளதாகவிருக்கும் உப-பந்தி (V) நீக்கப்பட்டு அதனிடத்தில், பின்வரும் புதிய பந்தி பதிலீடு செய்யப்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தால், சபையின் வழிநடத்தலின் கீழ், வகுப்பு 1 இலிருந்து விசேட வகுப்பிற்கு பதவியுயர்த்தும் நோக்கத்தின் பொருட்டு, முகாமைத்துவம், உளச்சார்பு பற்றிய இரு வினாத்தாள்களைக் கொண்ட பரீட்சையொன்று நடத்தப்படுதல் வேண்டும். மேற்படி பரீட்சையிற் சித்தியெய்துபவர்களைப் பதவியுயர்த்துவதன் மூலம் விசேட வகுப்பில் உள்ள வெற்றிடங்களின் 40 சத வீதமானவை நிரப்பப்படும். எவ்வாறாயினும், விசேட வகுப்பிற்கு பதவியுயர்வுகளளிக்கப்படுகையில், இலங்கை தொழில்நுட்பவியற் சேவையின் வகுப்பு 1 இல் 10 ஆண்டுகள் அல்லது அதற்கும் கூடிய அனுபவத்தைக் கொண்டுள்ளவர்களுக்கு விசேட சலுகை அளிக்கப்படல் வேண்டும். ஆகவே, இதற்கமைய தொடர்புடைய பரீட்சையிற் சித்தியடையும் அலுவலர்களை நியமிப்பதன் மூலம் பின்வரும் சதவீதத்திற்கமைய வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும்.

| | |
|---|---|
| 2000 திசெம்பர் 31 வரை | 20% |
| 2001 திசெம்பர் 31 வரை | 21% |
| 2002 திசெம்பர் 31 வரை | 22% |

இதே வகையில் 2020, திசெம்பர் 31 முதல் ஆண்டொன்றுக்கு 1 சதவீத அதிகரிப்பு மூலம் 40 சத வீதத்தினை அடையும் வரை.

06. **10.0 இடைக்கால ஏற்பாடுகள்**

10(11) ஆம் உப-பந்தி நீக்கப்பட்டு பின்வரும் உப-பந்தியைப் பதிலீடு செய்யப்பட்டுள்ளது.

" 10(11) 27/94 ஆம் 27/94(1) ஆம் இலக்க, அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகளின் நியதிகளுக்கமைய இலங்கைத் தொழில்நுட்பவியற் சேவையின் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டபோது மத்திய மட்ட தொழில்நுட்பச் சேவையின் ஒவ்வொரு தரத்திலும்/ பிரிவிலும் அலுவலர்கள் ஆற்றும் சேவைக்காலப் பகுதியானது அவர்கள் எந்த வகுப்பிற்குள்/பிரிவிற்குள் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளனரோ அவற்றில் ஆற்றிய சேவையாகக் கருதப்படல் வேண்டும்".

07. வகுப்பு 11 " அ " , வகுப்பு 11 " ஆ " எனும் சொற்கோவைகள் இப் பிரமாணக்குறிப்பில் தென்படுமிடங்களில் அச்சொற்கோவைகள் நீக்கப்பட்டு அவற்றிற்காக " வகுப்பு 11 பிரிவு " அ ", வகுப்பு 11 பிரிவு " ஆ " எனும் சொற்கோவைகள் பதிலீடு செய்யப்படல் வேண்டும்.

08. மேற்போந்த திருத்தங்களுடன் வாசிக்கப்படும் பிரமாணக் குறிப்புடன் ஒத்திசையும் வகையில் வெவ்வேறு பதவிகளுக்கு உரியதாகவிருக்கும் ஆட்சேர்ப்புத் திட்டங்களை மீளாய்வு செய்வதற்கு திணைக்களத் தலைவர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஒப்பம்: மகிந்த பந்துசேன,
செயலாளர்.
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

நா/-